ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2336/15 - 2023 ජූනි මස 12 වැනි සඳුදා - 2023.06.12
*2336/15 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: WGSWD&EIP/ACQ/DW/04.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் இல.:
4/3/10/2012/LRB/98.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

(வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ், அத்திடிய, பெல்லந்தர வயல் வெளியில் மழைநீரை தற்காலிகமாக சேகரித்து வைக்கும் பொருட்டு நீர் ஒதுக்குப் பிரதேசமொன்றை அமைக்கும் வகையில் கெஸ்பேவை (119) பஸ் பயண வீதிக்கும், மகரகமை - மொறட்டுவை (192) பஸ் பயண வீதிக்கும் இடையில் அமைந்துள்ள காணித் துண்டை அரசுக்கு எடுத்துக் கொள்ளல்)

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 535A - பெல்லன்வில கிராம அலுவலர் பிரிவில், பெல்லந்தர கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2020.12.21 ஆந் திகதிய 9920 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்ட 10.1976 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டு :

*01.* **துண்டு இல. 1**
காணியின் பெயர் : பெல்லன்வில அத்திடிய சரணாலயம்; விபரம் : ஒதுக்கம் நிலையான கட்டிடமொன்று, நிலையான கட்டிடங்கள் இரண்டின் பகுதிகள், தற்காலிகக் கட்டிடங்கள் இரண்டின் பகுதிகள் என்பன காணப்படுகின்றன. கால்வாயின் ஒரு பகுதியும் காணப்படுகின்றது; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : தெரியாது; விஸ்தீரணம் : 10.1976 ஹெக்டயார்.


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணித் துண்டிற்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இராஜகிரிய, வெலிக்கடை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 இல் அமைந்துள்ள, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும், 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். திலக்கவர்தன,
காணி எடுத்தல் அலுவலர்,
வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும்
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்,
கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவு.

வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும்
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின்
காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,
இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்,
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய,
2023, மே 18.

EOG 06 - 0065

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: HAK/LAN/1/4(VI).

1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் மேற் குறித்த தலைப்பின் கீழ் இல. 2321/71 மற்றும் 2023, மாச்சு 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் III ஆம் பகுதியில் என்னால் விளம்பரப்படுத்தப்பட்ட குறிப்பு இல. HAK/LAN/1/4(VI) மற்றும் 2023, ஏப்பிறல் 26 ஆந் திகதிய விளம்பரத்தின் நேர்முகப் பரீட்சை திகதி மற்றும் நேரம், நட்டஈடு தொடர்பாக விண்ணப்பம் முன்வைக்கும் திகதி பின்வரும் விதமாக திருத்தப்பட்டதாக இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

9 ஆம் பிரிவின் கீழ் நேர்முகப் பரீட்சை திகதி - 2023.07.06
மு.ப. 10.00 மணி

நட்டஈடு தொடர்பாக விண்ணப்பம் முன்வைக்கும் திகதி - 2023.06.30
மு.ப. 10.00 மணி

பீ.எஸ். ரன்ஜித,
பிரதேச செயலாளர்,
ஹக்மன.

பிரதேச செயலகம்,
ஹக்மன,
2023, யூன் 08.

EOG 06 - 0066